TOTAL PAGES: 2
**19TAU19**

**PSG COLLEGE OF ARTS & SCIENCE**
(AUTONOMOUS)

**BA DEGREE EXAMINATION MAY 2024**
(Sixth Semester)

Branch – **TAMIL**

**SANGAILAKKIYAM**

Time: Three Hours  Maximum: 50 Marks

## பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. (5 x 1 = 5)

1 "துறைதொறும் பரக்கும் தூமணற் சேர்ப்பனை" - எந்நிலத்தைக் குறிக்கிறது?
(அ) நெய்தல் (ஆ) முல்லை
(இ) குறிஞ்சி (ஈ) மருதம்

2 ஆவியர் பெருமகன், பெருங்கல் நாடன் - என்று சிறப்பிக்கப்படுபவன் யார்?
(அ) அதியமான் (ஆ) பேகன்
(இ) பாரி (ஈ) ஓரி

3 "வரை வான்தோய் வெற்பன்" - இதில் இடம் பெற்றுள்ள கருப்பொருட்கள்?
(அ) நிலம், மக்கள் (ஆ) நிலம், நாடு
(இ) நிலம், தெய்வம் (ஈ) நிலம், அல்லோர்

4 "நனந்தலை உலகம்" எனத் தொடங்கும் நூல் எது?
(அ) சிறுபாணாற்றுப்படை (ஆ) முல்லைப்பாட்டு
(இ) குறிஞ்சிப்பாட்டு (ஈ) திருமுருகாற்றுப்படை

5 அரசனின் பண்புகளை இயல்புற மொழியும் துறையின் பெயர் யாது?
(அ) செவியறிவுறுத்தல் (ஆ) அரசவாகை
(இ) குடை மங்கலம் (ஈ) இயன்மொழி

## பகுதி - ஆ

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5 x 3 = 15)

6 அ. குறுந்தொகையில் முல்லைத்திணைப்பாடல்களில் இடம்பெற்றுள்ள கார்காலக் காட்சிகளைப் புலப்படுத்துக?

(அல்லது)

ஆ. குறுந்தொகை மருதத்திணைப்பாடல்கள் காட்டும் தலைவியின் வருத்தத்தைப் புலப்படுத்துக.

7 அ. கடையேழு வள்ளல்களின் கொடைத்தன்மையை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ. நல்லியக்கோடனின் விருந்தோம்பற் பண்பு குறித்து எடுத்துரைக்க.

8 அ. வினைமுடிந்து திரும்பும் தலைவனின் மனவுணர்வுகளை அகநானூற்றின் வழி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. அறத்தொடு நிற்றல் - அகநானூற்றுப் பாடல் வழி எடுத்துரைக்க.

**Cont...**

9 அ. மாலைப்பொழுதில் தலைவியின் மனவுணர்வினை முல்லைப்பாட்டு வழி எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. "இருத்தலும் இருத்தல் நிமித்தமும்" என்னும் உரிப்பொருளை முல்லைப்பாட்டு கொண்டு மதிப்பிடுக.

10 அ. புலவரைப் பெருமைப்படுத்திய புரவலரின் இயல்பை மோசிகீரனார் பாடல் கொண்டு எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ. "கோடி யாத்து நாடு பெரிது நந்தும்" என்று அரசனுக்கு அறிவுறுத்திய பிசிராந்தையார் பாடற் கருத்தைப் புலப்படுத்துக.

## பகுதி - இ

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5 x 6 = 30)

11 அ. நம் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள குறுந்தொகை பாலைத்திணைப் பாடல்கள் பற்றி கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ. குறுந்தொகைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள திணை சார்ந்த முதல், கருப்பொருட்களைப் பட்டியலிடுக.

12 அ. நல்லியக்கோடனின் இயல்பும் கொடைத்திறமும் குறித்து ஆய்க.

(அல்லது)

ஆ. சிறுபாணாற்றுப்படை காட்டும் நகர்வளமும் மக்களின் இயல்பும் குறித்து விளக்குக.

13 அ. பாலைத்திணைக்குரிய உரிப்பொருளையும் நில இயல்புகளையும் அகநானூற்றுப் பாடல்கள் வழி விளக்கியுரைக்க.

(அல்லது)

ஆ. மருதத்திணைக்குரிய முதல், கரு, உரிப்பொருட்களை நன்முல்லையாரின் அகநானூற்றுப் பாடல் வழி எடுத்தியம்புக.

14 அ. முல்லைப்பாட்டில் இடம்பெறும் பாசறையின் அமைப்பினை விளக்குக.

(அல்லது)

ஆ. முல்லைத்திணையின் புற ஒழுக்கமே வஞ்சி என்பதை ஆராய்க.

15 அ. பெருநற்கிள்ளியை விரும்பிப் புகழ்ந்துரைத்த நக்கண்ணையாரின் புறநானூற்றுப் பாடற்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ. பழந்தமிழரின் புற வாழ்வியல் சிறப்பினை புறநானூறு கொண்டு நிறுவுக.

Z-Z-Z END